ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकविता गानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिनटनहास्येष्वचतुरः ।
कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोऽहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथितकृपया पालय विभो ॥

வேதங்களின் பொருளை வெளியிடும் ஸ்மிருதிகள் வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள் வைத்திய சாஸ்திரம் பக்ஷிசாஸ்திரம், கவிதை, கானசாஸ்திரம் முதலானவைகளில் நான் பாண்டித்தியமற்றவன், போற்றல், நர்தநம் செய்தல், விகடம் இவைகளிலும் எனக்கு ஞானமில்லை. ஆகையால் நான் மிகவும் தாழ்மையான ஸ்திதியிலிருப்பவன். இவ்விதமிருக்கும் என்னிடத்தில் அரசர்களுக்கு எங்ஙனம் பிரியமுண்டாகும். சகல விஷயங்களையும் நன்கறிந்தவராயும் வியாபகராகவும் விளங்கும் ஹே பசுபதே! பரமேசுவர பசுவாயிருக்கும் என்னை எங்கும் பிரஸித்தமான உமது கருணையால் பாதுகாப்பாயாக.

ஒரு வித்தையிலும் பயிற்சிபெறாத வொருவர் ஈசனது கருணையால்தான் நற்கதியடைய வேண்டுமெனக்கருதி அடியில் வருமாறு பகவானிடமறிவிக்கிறார்.

"ஹே பசுபதே! பசுக்களுக்கெல்லாம் எஜமானனாயிருந்து ரக்ஷிப்பவரே" என்கிற இந்தப்பதத்தால் பசுவாயிருக்கும் தன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை உம்முடையதென்று தெரிவிக்கிறார். தான் ஒன்றுமறியாத பசு என்பதையுமறியும் சக்தி தங்களுக்கேயிருக்கென்பதையும ஸர்வக்ஞ என்கிற விசேஷணத்தால் நிரூபித்து, பிறகு என்போன்றவர்களைப் பாதுகாப்பதே உமக்கு இயற்கை என்று "ப்ரதித க்ருபயா" என்கிறபதத்தால் அறிவித்து, எவ்விதத்திலும் என்போன்றவர்களை ரக்ஷிக்கவேண்டிய கடமை உமக்கிருப்பதால் என்னை கைவிடாமல் அவசியம் பாதுகாக்க வேண்டுமென்று வேண்டுகிறார். சுபம்.

ஆர்யதர்மம். உபபத்திராதிபர்.

ஆயுளின்காலம் நிலையற்றது.

(சுஉ-அம் பக்கத் தொடர்ச்சி.)

மேலும் இந்திரனும் நிச்சயமான ஆயுள்கணக்கைப் பெற்றதன் சத்ருவை வச்சிராயுதத்தாலும், ஒன்றும் செய்யமுடியாது. மஹரிஷிகளாலும், தம்முடைய தவத்தால் இஷ்டப்படி ஆயுளின் அபிவிருத்தியை யடையவியலாது. ஒரு காலத்தைக் குறிப்பிட்டு இவ்வளவு காலம்வரை ஆயுளென்று ஏற்பட்டு விட்டால் அவ்வித மனிதர்கள் உலகத்திற்கு அதிக கஷ்டத்தை யுண்டுபண்ணினல், ராமகிருஷ்ணுதி அவதாரங்களைப் போல் ஈசுவரனே நேரில் அவதரித்தாலும், அவர்களை ஒன்றும் செய்ய முடியாமல், ஆயுளின் முடிவுகாலத்தை எதிர் பார்த்திருக்க வேண்டும். ஆகையால், அதிகமான சிறந்த புண்ய கர்மங்களின் அனுஷ்டானத்தால் ஆயுள் விருத்தியும், அவ்விதமின்றி கெட்டகர்மாவைச் செய்தால் குறைவு மேற்படு மென்பதே உசிதமாகும்.

இவ்விதம் கூறும் ஆத்ரேயரின் மொழியைச் செவியுற்ற அக்னிவேச்யர், ஆத்ரேயரை நோக்கி "ஹே பகவன்? இவ்வளவு காலமென்று நிலையற்ற ஆயுளின் பிரமாணத்தை யுடையவர்களுக்குக் காலமிருத்யு வென்றும், அகாலமிருத்யு வென்றும் எங்ஙனம் ஏற்படுகின்றது?" என்று வினவுங்கால் அடியில்வருமாறு செப்புகின்றார். ஓர்வண்டியில் போடப்பட்ட அச்சானது இயற்கையில் அதற்கு ஏற்பட்ட பலத்திற்குற்றபடி ஒரு நிமிஷம் கூடக்குறையாமல், சரியாய் வண்டியிலிருந்து கொண்டு, அதன் காரியத்தை நடத்திக் கிரமமாய் பலம் குன்றிய பிறகு முடிவில் எங்ஙனம் வண்டியை விட்டு விலகுகின்றதோ, அவ்விதம் தனது புண்ய கர்மாவால், பூர்ணமான ஆயுளைப்பெற்ற ஒரு சரீரத்திலிருக்கும் ஆயுளானது 100 அல்லது 200 உள்ள தனக்

கேற்பட்ட காலம் வரையில் சுபாவமாயுபசரிக்கப்பட்டால் அச்சரீரத்திலிருந்து முறையே தன்காலக் கணக்குப் பூராவும் சென்றபிறகு, அதைவிட்டு விலகும். இவ்விதம் ஆயுள் விலகுவதைத்தான் காலமிருத்யு வென்பார்கள். முந்தி உவமையாகக் காண்பித்த வண்டியின் அச்சானது சுமார் 30 வருஷகாலம் கிரமமாய் வேலைசெய்யக் கூடியதாயிருந்தாலும் அதற்கு எவ்வளவுபாரம் போடலாமோ அதற்கு அதிகமான பாரத்தைப் போட்டாலும் அல்லது மார்க்கத்திலுள்ள பள்ளம், மேடுகளைக் கவனிக்காமல், வண்டியை விட்டாலும், கிரமமானமார்க்கத்தை விட்டுக் கண்டவிடங்களில் விட்டாலும், எப்படி 2. , 3. வருஷங்களுக்குக்குள் அதன் சக்திகுன்றி முறிந்துவிடுமோ, அவ்விதம் ஆயுளும் தன்சக்திக்குமீறி வேலை செய்வதாலும், ஆசையின் பேரில் ஜீர்ணமாகாத அதிகமான ஆகாரங்களை அருந்துவதாலும், தன்சரீரத்திற்குப் பழக்கமில்லாத கெடுதலான ஆகாரங்களைப் புசிப்பதாலும், சம்பந்தப்படக் கூடாத விடங்களில் சம், மந்திப்பதாலும், சிற்றின்பத்தில் அதிகப் பிரவிருத்தியாலும் கெட்ட பழக்கங்களாலும், மலம், ஜலம் இவைகளைக் கிரமமான காலத்தில் வெளிவிடாமல் அடக்குவதாலும், அடக்க வேண்டிய வேகத்தை அடக்காததினாலும், வாயு, அக்கினி முதலான பூதங்களாலேற்படும் அதிதாபத்தாலும், பசிஸமயத்தில் உண்ணுமல் அடக்குவதாலும், அதிக தோஷமுள்ள கார்யத்தைச் செய்வதாலும், கிரமமாயேற்படும்காலம் குறைந்து, மத்தியில் அகால மிருத்யு ஏற்படுகின்றது.

ஆகையால், ஏற்பட்ட பூர்ணமான ஆயுளை நம்முடைய கெட்ட நடத்தைகளால் மத்தியில் விலகும்படி செய்துகொள்ளாமலும், நம்வாழ் நாட்களில் செய்யவேண்டியதென்னவென்பதை நன்கு ஆலோசித்தும், நம்புத்திக் கெட்டாவிடில், சகடக் கலைகளைக் கற்றறிந்த கல்விமான்கள் வாயிலாகவாவது அறிந்து கொண்டு, நன்னெறியைக் கைவிடாமல் ஒழுகுவோமாயின் இம்மையிலும், மறுமையிலும் அதிகமான சிரேயஸ்ஸைப் பெறலாம்

சுபம்

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

இராமாயணம்—ஓர் ஆராய்ச்சி.

(௯௱௭-வது பக்கத்தொடர்ச்சி)

இராமாயணத்தினின்றும் வெளியாகும் நீதிகள்

ஸ்ரீ மத்ராமாயணத்திலுள்ள பல பிரகரணங்களால் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் பலவுள. அவற்றையும் அடியில் வருமாறு காண்க. முதலில் அயோத்திப்பட்டணத்தை வர்ணித்தலாற் பட்டணங்களைக் காக்கும் வழியும், தேசத்திற் செல்வம் பெருக முக்கியகாரணமான வியாபாரமும், நாஸ்திகன் பொய்யன் முதலியவர்களை அரசர்கள் ஆளவேண்டிய வழியும், சிற்பிகள் அதாவது கைத்தொழிலாளர்கள் இருப்பது நகரச்சிறப்பென்பதும், சைனியங்களை பாதரித்தல் அரசர் தர்மமென்பதும் வெளியாகின்றது. பிறகு தசரதர் ஆலோசனை செய்யுமிடத்திலுருள்ளகலைக்கோட்டுமா முனிவர்கதையால்வித்தையின் கௌரவம், ஞானத்தின் மேன்மை, தைரியம், ஸாஹஸம் இவை பெண்களுக் குரியவென்பதும், அரசர்கள் அமைச்சருடன் கலந்து ஆலோசிக்கவேண்டிய முறைமையும் புலப்படும். அசுவமேதப்பிரகணத்தாற் சூரர்களுடைய தொழிலும், ஸ்ரீமந்நாராயணனைக் கண்ட படலத்தால் கடவுளுடைய கருணையால் கடுமையான ஆபத்துகளைத் தாண்டலாமென்றும், விசுவாமித்திர முனியின் வரவை வர்ணித்தலாற் பிள்ளைகளினிடம் பெற்றோர்களின் அன்பும், பெரியோர்களுடைய சொல்லில் நம்பிக்கையும், அறிஞர்களுக்குமோர் ஆசாரியன் வேண்டுமென்பதும், தாடகாவதத்தால் லோகோபத்திரவம் செய்பவர்களிடம் ஒரு விதத்திலுங்கருணை கூடாதென்பதும், விசுவாமித்திரர் சொல்லிய பல கதைகளால் பற்பல நீதிகளும், வில்முறித்த கதையால் நாயகனிடம் அமைந்த நற்பேரும் வீரியமும், உசிதமான விவாகசம்பந்தமும், பரசுராமகர்வபங்கப்படலத்தால் தமது தொழிலைக் கடந்து போர்முகத்தில் நிற்பவரிடம் வர்ணாசிரமதர்மங்களைப் பாராட்டுவது அனாவசியகமென்பதும் விசுவாமித்திரர் விடைபெற்றுச் சென்ற கதையால் பெரியோர்கள் பரோபகாரஞ்செய்வது உசிதமெனவும், சீதையின் சரித்திரத்தைச் சிறப்பித்தலால் சிற்சில ஸ்திரீ தர்மங்களும் பாலகாண்டத்தில் அடங்கியுள்ளன.

அயோத்தியாகாண்டத்திலோ, தொடக்கத்தில் தசரதர் மந்திராலோசனை செய்தபடலத்தால் சபைகளினிலக்கணமும், அவைகளைநடத்தும்வழிகளும், கைகேயின் கதையால்சபத்தினிகளிடமும் அவர்களின் குழந்தைகளிடமுமுள்ள குரூரத்தன்மையும், சத்தியசந்தனுக்கும் ஓர்சமயம தமது சொல்லை நிர்வகித்தலாலுண்டாகும் கஷ்டமும், பெற்றோர் வார்த்தையைக் காத்தல் பிள்ளைகளுடைய கடனென்பதும், லட்சுமணன் வனவாசசங்கற்பதால், உடன்பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் நேசித்தலும் சீதாராமசம்வாதத்தால் அனேகஸ்திரீதர்மங்களும், லட்சுமண சுமித்திராசம்வாதத்தால்ஞானவதிகளாகியதாய்மார்களின் தன்மை நடை இவைகளும், கௌசலை ரக்ஷை செய்த சரிதத்தால் பெண்களுக்குப் பிள்ளைகளிடமுண்டான பேரன்பும், இராமன் வனமேகிய படலத்தால் ஜனங்களுக்கு இராஜவம்சத்திலுள்ள பக்தியும், குகனைக் கண்டபடலத்தால் சிநேகத்தின் தன்மையும், பிரதிஞ்ஞையை நிறைவேற்றும் வன்மையும், சித்திரகூடத்தை யடைந்த கதையால் பெரியோர்கள் வார்த்தையைப் பின்பற்றும் வழியும், பரதன் சரித்திரத்தால்இராஜதர்மம், சகோதர வாஞ்சை முதலாயினவும், ஜாபாலிமுனிவர சரித்திரத்தால் உபாயங்களின் உண்மையும், பரதனைத் திருப்பியனுப்பிய சரித்திரத்தால் ஸ்திரபுத்தியின் சுபாவமும், கானகம்புகுந்த கதையால் நாயகன் தைரியமும் இன்னும் பல விஷயங்களும் வெளியாகின்றன,

ஆரண்யகாண்டத்திலும், பலமகரிஷிகளைக்கண்ட கதையால் தேசாந்தர சஞ்சாரத்தின் பலமும், சூர்ப்பணகியின் சரித்திரத்தால் அக்காலத்தில் அரக்கிகளை தண்டிக்கும் வழியும், காவதைப் படலத்தால் யுத்தமரியாதையும், சீதையை அபகரித்த படலத்தால் காலவிபரீதத் தாலுண்டாகும் துரெண்ணங்களும், பெண்டிர்களுக்குச் சமயத்திற் கொருவிதமாக புத்திமாறுபடுதலும், மாயாவாதிகள் செய்யுந் தந்திரங்களும், ஜடாயுவின் விருத்தாந்தத்தால் பறவைகளிடத்து முள்ள பற்பல வரிய தர்மங்களும், இராமன் விசனமுற்ற கதையால் தமக்கேற்ற களத்

திரம் நீங்குதலா லுண்டாகும் துயரம் சகிக்கக்கூடா தென்பதும், ஜடாயுவைச் சம்ஸ்கரித்ததால் உபகாரிகளுக்குப் பிரதியுபகாரஞ் செய்யவேண்டு மென்பதும், தென்னாட்டின் காட்டிற் புகுந்த கதையால் ஆபத்துக்காலத்தில் விடாமுயற்சி வேண்டு மென்பதும் தெற்றென விளங்குகின்றது.

கிஷ்கிந்தகாண்டத்திலோ, சபரியைக் கண்டகதையால் பெண்களுக்கும் பெரியோர்கள் சகவாசத்தாலுண்டாகும் பேற்றின் பெருமையும், அநுமனைக் கண்ட படலத்தால் மேதாவியான மந்திரி செய்ய வேண்டிய வேலையும், சுக்ரீவனை சிநேகித்த படலத்தால் சிநேகமென்பது பெரும் பலமென்பதும், வாலிவிதைப் படலத்தால் மித்திர காரியத்தைச் செய்யும் வழியும், இலட்சுமணனை தூதனுப்பியகதையால்காதல்கொண்டவர்காரியத்தை மறப்பர் என்பதும், கபிகளையனுப்பியதால் அக்காலத்திய பூகோளத்தினிருப்பும், சம்பாதி சரித்திரத்தால் பட்சிகளிலும் சகோதரவாஞ்சையும், மகரிஷிகள் முக்காலமு மறிவாரென்பதும், சமுத்திரத்தைக்கடக்க வாலோசித்த படலத்தால் தற்புகழ்ச்சி யில்லாதவன் வீரனென்பதும், இன்னும் பல நீதிகளும் வெளியிடப் பட்டிருக்கின்றன.

அங்ஙனமே சுந்திரகாண்டத்திலும், தூதர்களின் தொழில் மந்திரிகளின் வேலை, காமுகனுடைய கரைகடந்த நடைகள், சத்துருக்களுக்கு தூதகாரியமான தேஜோவதை, பதிவிரதைகளின் மாண்மியம், நல்லொழுக்க முள்ளவர்களின் நடவடிக்கைகள், கொடுங்கோல் மன்னனர்களின் அரசாட்சி, சிநேகிதர்களைத்தூண்டுதல் பிரபுக்களிடங் குற்றஞ் செய்தவர்கள் குற்றங்களை மன்னிக்க வேண்டும் வழி, காரியங்களைச் சாதித்தவர் தமது கௌரவத்திற்கேற்க அரசர்களிடம் பேசும் அழகு, பெரியோர்கள் எவ்வித ஆபத்துக்காலங்களிலும்ஒரேநிலையுள்ளவர்களாயிருதல் வேண்டு மென்பது ஆகிய இவையெல்லாம் முறைமே நன்கு தீட்டிக் காட்டப் பட்டுள்ளன.

யுத்தகாண்டத்திலோ, இராஜதூதர்கள் செய்யவேண்டிய வழிகளும், விபீஷண சரணாகதியால் இராஜ தர்மங்களின் இரகசியங்களும், கருணையின் பெருமையும், அடுத்தவர்களிடத்து அன்பும், சேதுபந்த சரித்திரத்தால் மகான்களுக்கும் காரிய விஷயங்களில் பெருமையும், கீழ்மக்களுக்குத் தண்டமே குணங்கொடுக்குமென்பதும், யுத்தங்களை வர்ணித்தலால் பலவித யுத்தவழிகளும், சீதாதேவியைப் பரீட்சித்த கதையால் லோகாபவாதத்தில் பெரியோர்களுக்குள்ள பயமும், சிவபிரான் திருவாக்கைத் தழுவியதாலும் தமது பிதாவைக்கண்டு உபசரித்ததாலும் தேவபிதுர் வாக்கியங்களை மீறக்கூடாதென்பதும், பரதனைக் கண்ணுற்ற கதையால் சகோதர வாஞ்சையின் பெருமையும், பட்டாபிஷேக வைபவத்தால் சத்தியமுள்ளவன் சகல ஆபத்தும் நீங்கி நித்திய சுகம் பெறுவானென்பது முறையே வெளியிடப் பட்டிருக்கின்றது.

உத்தரகாண்டத்தில் விஷயங்கள் பலவுளவாதலால் அவைகளைச் சமயம் நேருங்காலெடுத்துக் காட்டுவோம். இவ்வேழு காண்டங்களுள் சுந்தரகாண்டமென்பது மிகச்சிறந்தது. எங்ஙனமெனில் பெரும்பாலும் அக்காண்டத்தி லடங்கிய சுலோகங்களெல்லாம் அலங்காரம் நிறைந்து அகிலரசம் பொருந்தியன. மற்றோர் விசேஷமும் இக்காண்டத்தில் உண்டு. உலகில் நேரில் கடவுளைத்தாம் வழிபடுவதிலும் அவர் தொண்டரை வழிபடுவது மிகநலமெனக் கொண்டு, ஸ்ரீ ராமசந்திரனது சரித்திரத்தைப் படித்து அவரை வழிபடுவதிலும் அவரது தொண்டராகிய அனுமனை அவரது சரித்திரவாயிலாக் வழிபடுவது மிகநலமெனக்கருதி இதை அன்போடு படித்து வருகின்றார்கள். நிற்க நாம் சுந்தரகாண்டத்தினுயர்வைக் கூறியதால், அதன் பிரத்தியேக மகிமையைக்கூறவந்தோமேயன்றி மற்றைய காண்டங்கள் உபயோக மற்றதெனக் கூறவந்தோமில்லை. மற்றேனெனில், இவைகளுள் அடங்கியுள்ள அருநீதிகளே இக்காண்டங்களின் உயர்வுக்குற்ற அத்தாட்சி. சுருக்கிச் சொல்லுங்கால்,

இவ்விராமாயணத்தை முற்றிலும் படிப்பவர்களுக்கு வடமொழியின் சிறப்பும், ஏனைய பாஷைகளிற் காணக்கூடாத அருமையான அலங்காரங்களும், முற்காலத்திய இந்துக்களின் நடைகளும், அக்காலத்துப் பட்டணங்களின் தன்மைகளும், அரசர்களின் தர்மங்களும், துர்ஜனங்களின் கொடூரத்தன்மையும், பாவமானது மிகுந்த கேட்டை விளைக்கு மென்பதும், ஸ்திரீகளின் தர்மமும், இன்னும் கணக்கிலடங்காத பற்பல அரும்பெரும் நீதிபுதையல்களும் மனதிலே உறுதியாய் நிலைபெறுமென்பதிற் றடையில்லை. இனி இராமாயணத்தின் உயர்வைப்பற்றிச் சிறிதுகூறி நீண்ட இவ்வியாசத்தை முடிப்பாம்.

(தொடரும்)

ப. வ. கணபதிசாஸ்திரி, B. A.

தற்காலத்திய வைதிக உபாத்தியாயர்களின் நிலைமை

இந்துக்களில் எவ்விதமான வைதிக கர்மாக்களை யனுஷ்டித்தாலும் ஒவ்வொரு குடும்பத்திற்கோ அல்லது கிராமத்திற்கோ, வேதாத்தியயனம் செய்து, தர்ம சாஸ்திரங்களைக் கசடறக்கற்று, எவ்வித கர்மாக்களையும் விதிவழுவாது நன்கு நடத்திவைக்கும் திறமைவாய்ந்த பெரியோர்களை ஆசார்யாளாகக் கொண்டு அவர்கள் கூறியபடி ஒவ்வொரு ஸமயங்களிலும் கர்மானுஷ்டானங்களை முன்னிருந்தவர்களும் நடத்தி வந்தார்கள்; தற்காலத்திலிருப்பவர்களும் நடத்தி வருகிறார்கள்; என்பது வெளிப்படையே. முற்காலத்தில் குடும்பத்திற்கோ, கிராமத்திற்கோ உபாத்தியாயராயிருந்து வைதிக கர்மங்களை நடத்திவந்த பெரியோர்களும் ஆஸ்திகர்களாயிருந்து கொண்டு, பூர்ணமான ஈசுவரபக்தி, நல்லொழுக்கம், பாபத்தில் பயம், புண்யத்தில் விருப்பம் முதலிய நற்குணங்களா லலங்கரிக்கப்பட்டு, மனிதர்களின் தாக்ஷிண்யத்தையோ, அதிகமான பொருள்வரவையோ அற்பமேனு மெதிர்பாராமல் சாஸ்திரங்களையே முக்

இய ஆதாரமாய்க் கொண்டு, பரலோகத்திற்குப் பயந்து, சிரத்தையுடன் சகல கார்யங்களையும் நடத்தி வந்தார்கள். அவ்விதம் அவர்கள் செய்து வைத்து வந்தபடியால் அந்த ஸமயங்களில் அகாலமரணமும், கெட்டவியாதியும், தாரித்திரியத்தால் வறுமையும் ஏற்படாமல், அவ்வக்காலங்களில் உசிதமான மழையும், தானியங்களின் செழிப்பும், ஜனங்களுக்குச்சந்தோஷமும் குறைவில்லாமலிருந்தன. நம் தேசக்ஷேமத்திற்கு உபாத்தியாயர்களால் ஆங்காங்கு நடத்தி வைக்கப்படும் வைதிககர்மங்களே முக்கிய ஸாதனமாய் விளங்கி வந்தன. ஆகையால் தான் அன்னோர்களிடம் நம்தேச மன்னர் முதலாக சகல ஜனங்களும் அன்புபாராட்டி மிகுந்த பக்தி சிரத்தையுடன் ஒவ்வொரு ஸமயங்களிலும் அவர்களுடைய வரவை எதிர்பார்த்து,வந்தவுடன் அடிபணிந்து, அவர்களுக்குக் கெதிரில் உட்காராமல் நின்று கொண்டு அவர்களினுக்ஞையின்பேரில்தான் உட்காருவார்கள். ஒருஸமயம் ரவிவம்சத் தரசனான திலீபன் தன்குல குருவான வஸிஷ்டரைத் தர்சிக்க வேண்டி அரண்யத்தில் தவத்திலிருக்கும் அம்மஹானிடம் சென்று, வந்தனமளித்து அவரால் செய்யப்பட்ட அதிதிஸத்காரத்தையும் பெற்று அருகில் விளங்கும் பொழுது வஸிஷ்டர் கூறுகின்றார்.

तमातिथ्यक्रियाशान्तरथक्षोभपरिश्रमम् ।
पप्रच्छ कुशलं राज्ये राज्याश्रममुनिं मुनिः ॥

தம்மால் செய்யப்பட்ட உபசாரத்தால் ரதத்தில் வந்த சிரமம் நீங்கி சுகமாயிருக்கும், ராஜ்ய மென்கிற ஆச்ரமத்திற்கு, முனியான அந்தத்திலீபனை வஸிஷ்டர் க்ஷேம சமாசாரத்தை வினவுங்கால், மன்னன் கூறும் மறுமொழியாவது.—

उपपन्नं ननु शिवं सप्तस्वंगेषु यस्य मे ।
दैवीनां मानुषीणां च प्रतिकर्ता त्वमापदाम् ॥

என்னுடைய எஜமானன், மந்திரி, மித்ரன் முதலான ஏழுவகை அங்கங்களும் ஸௌக்கியமாக விருக்கின்றன. அஃது உசிதமே. தேவர்களாலும் மனுஷ்யர்களாலும் ஏற்படும் எவ்வித ஆபத்துக்

களையும் கிட்ட நெருங்கவிடாமல் விலக்கக்கூடிய சக்தி வாய்ந்த தாங்கள் ஆசார்யாளாயிருப்பதே அதற்கு முக்கிய காரணம்.

तव मन्त्रकृतो मन्त्रैर्दूरात्प्रशमितारिभिः ।
प्रत्यादिश्यन्त इव मे दृष्टलक्ष्यभिदश्शराः ॥

சகல மந்திரங்களையும் நன்றுயறிந்த தங்களால் செய்துவைக்கப் பட்டனவும், வெகுதூரத்திலேயே விலக்கப்பட்ட சத்ருக்களை யுடையனவுமான ஸத்கர்மானுஷ்டானங்களால் லக்ஷ்யத்தைப் பிளக்கின்ற என்பாணங்கள், அநாவசியமாய்ப் போக வேண்டாமென்று திருப்பப்படுகின்றன போலத் தோன்றுகிறது. இதனால் மனுஷ்யர்களா லேற்படும் துக்கம் தாங்கள் செய்துவைக்கும் கர்மானுஷ்டானங்களால் வராமல் தடுக்கப்படுகின்றனவென்று தெரிவிக்கப்படுகின்றது.

हविरावर्जितं होतः त्वया विधिवदग्निषु ।
वृष्टिर्भवति सस्यानामवग्रहविशोषिणाम् ॥

இதனால் தேவதைகளாலேற்படும் ஆபத்திற்குப்பரிஹாரம் சொல்லப்படுகின்றது. தங்களால் சாஸ்திராபிப்பிராயத்திற்கிணங்க அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸானது மழையாகஆகி, தான்யங்களை நன்கு விருத்திசெய்து, ஜனங்களுக்குப் பூர்ணமான ஆஹாரத்தைக் கொடுக்கின்றது. இந்த அபிப்பிராயத்தையே மனுவும்

अग्नौ दत्ताहुतिस्सम्यगादित्यमुपतिष्ठते ।
आदित्याज्जायते वृष्टिर्वृष्टेरन्नं ततः प्रजाः ॥

என்கிற இதனால் நன்கு விளக்கிக்காட்டி யிருக்கிறார். பின்னும்

पुरुषायुष्जीविन्यो निरातङ्का निरीतयः ।
यन्मदीयाः प्रजास्तस्य हेतुस्त्वद्ब्रह्मवर्चसम् ॥
त्वयैवं चिन्त्यमानस्य गुरुणा ब्रह्मयोनिना ।
सानुबन्धाः कथं न स्युः सम्पदो मे निरापदः ॥

என்னுடைய ராஜ்யத்திலுள்ள சகலப் பிரஜைகளும் யாதொரு ரோகமுமின்றி ஒருபுருஷாயுஸ்ஸான நூறுவருடகாலம் ஜீவித்தி

ருந்து சந்தோஷத்தை யனுபவிப்பதற்குத் தங்களுடைய சிறந்த அனுஷ்டானமே காரணம். அன்றியும், பிர்ம புத்திரராயும் குருவாயுமிருக்கும் தாங்கள் எனது க்ஷேமத்தைக் கருதுங்கால் என்ராஜ்யத்திலுள்ள சகலமான சம்பத்துக்களும் யாதொரு துக்கமுமின்றி என் க்ஷேமமாயிருக்காது என்று குருவான வஸிஷ்ட மஹரிஷியிடம் தெரிவித்ததாகக் காளிதாஸகவி சாற்றியிருக்கிறார். இவ்விதம் பலவிடங்களில் அநேகம் பெரியோர்களால் நன்கு வெளியிடப் பட்டிருக்கின்றது. இம்மகான்களுடையசிறந்தகுணங்களையும்,தவப்பெருமையையும், கருணையையும்,அனுக்கிரக புத்தியையும் சுத்தமானசரித்திரத்தையும்கேட்கக்கேட்க அதிக ஆவலும்சந்தோஷமுமுண்டாகின்றது.முற்காலத்தில்குருவாயிருந்துவைதிககர்மானுஷ்டானங்களைநடாத்திவந்தமஹான்களின்நிலமையிவ்விதமிருக்க தற்காலத்திலும்அந்தஸ்தானத்தை வகித்து சில உபாத்தியாயர்கள் நடத்தி வைக்கும் வைதிக கர்மானுஷ்டானங்களைப் பார்க்க மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. காலதோஷத்தாலும், மற்றுமுள்ள பல அஸௌகர்யங்களாலும் கர்மாக்களை விதிப்படி சரியாய் நடத்த முடியாவிடினும், கூடியவரையில் பாபத்திற்குப் பயந்து நடத்த வேண்டியது அவசியமல்லவா!

உபாத்தியாயவிருத்தியைக்குறித்துக் சிலவிஷயங்கள் நாம் எழுதப் புகும்முன்னரே யோக்கியர்களாயும் ஆசாரசீலர்களாயும் வேதபாரங்கதாளாயுமிருக்கும் பெரியோர்களுக்கு எனது மனப்பூர்த்தியான வந்தனங்களை ஸமர்ப்பித்து பாபஹேதுவான தோஷநிவர்த்திக்காக அவர்களும் தர்மத்தை நிலைநிறுத்தவேணுமாய்பிரார்த்திக்கிறேன். முதலாவது ஒருவர் உபாத்தியாயவிருத்தியை வகிக்க முன்வருங்கால், அதற்கு இருக்கவேண்டியயோக்கியதை இன்னதென்று அறிந்துகொள்வதில்லை. அவசியமான வேதபாகங்களின் அத்யயனம்; தர்மசாஸ்திரஞானம்; ஸம்ஸ்கிருத பாஷையில் வ்யுற்பத்தி; வியாகரணம்மூலம் அந்தந்த சூத்திரகாரர்களால் சொல்லப்பட்ட கிருஹ்யம், தர்மம், இவைகளின் ஞானம்; கர்மாக்களைச் செய்து வைக்க வேண்டிய முறை; சிறந்த ஆசாரம்; பாபத்தில் பயம்; பொருளில் அதிக

ஆசையின்மை முதலிய இங்கு கூறப்பட்டவைகள் சாமான்யமாய் உபாத்தியாயரென்று பெயரைவகித்து, வைதிக காரியங்களை நடத்திவைக்க முன் வருவோர்களுக்கு இல்லாமல் சாத்தியப்படாது. இதற்குமேலும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல விருப்பினும், இக்காலத்தில் அவைகளைப்பூராவும் எதிர்பார்த்தல் சாத்தியமில்லை என்று விடுத்தனம். "இங்கு முக்கியமாய்க் கூறப்பட்டவைகளில் அவசியமிருக்க வேண்டிய வேதாத்தியயனமே செய்யாதவர்கள் சிலர் உண்டு. இவர்கள் அந்தந்த கர்மாவிற்கு வேண்டிய வேதமந்திரங்களை, அத்தியயனம் செய்தவர்களிடம் கேட்டு ஒரு ஏட்டில் தாறுமாறாய் எழுதிக் கொண்டு அதைப் பார்த்துப்பண்ணி வைக்கும் பொழுது, எழுத்துக்கள், ஸ்வரங்கள் இவைகளை மாற்றி தைர்யமாய்க் கர்மாவைச் செய்து வைக்கிறார்கள். அங்கிருக்கும் அறிஞர்கள், வீணில் கர்மா கெட்டுப் போகிறதே என்று பரிதாபத்தால், தவறை எடுத்துச் சொன்னாலும் அதைக்கேட்பது தம்பெருமைக்குக் குறைவென்று உபாத்யாயர்கள் அதில் செவிசாய்ப்பதேயில்லை. ஸம்ஸ்கிருத வியுற்பத்தியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். ராமசப்தம் ராமலிங்கம், ஹரிசப்தம் ஹரிலிங்கம் என்று தாமஸிக்காமல் சொல்லுவார்கள். விபக்திகளையோ, வசனங்களையோ, லிங்கங்களையோ மாற்ற வேண்டிய இடங்களில் அவர்களுக்குத் தோன்றியவாறே தவிர, விதியையனுசரிப்பது சிரமம். இவ்வித மிருப்பவர்களுக்கு தர்ம சாஸ்திரங்களின் ஸ்வரூபமும், அவைகளால் போதிக்கப்படும் தர்ம சூக்ஷ்மங்களும் எங்ஙனம் அறியமுடியும்? ஸ்மிருதிகளின் உண்மையான கருத்தையறியாமல் ஆஸ்திகர்களான வைதிகர்களுக்கு எந்தக்காரியம்தான் நடைபெறும்? தர்ம சாஸ்திர ஞானமில்லாத உபாத்தியாயர்களால் நடத்தி வைக்கப்படும் வைதிக கர்மாவானது பயனற்றதாவதுமின்றி, சிரேயஸ்ஸையுத்தேசித்து அனுஷ்டிக்கப்படும் கர்மா அசிரேயஸ்ஸுக்குக் காரணமாகின்றது. இங்கு ஸமீபத்தில் நடைபெற்ற சிறந்த வைதிக கர்மாவின் விபரீதானுஷ்டானம் ஞாபகத்தில் வருகிறபடியால் இங்கு அதைவெளியிடாமலிருக்க முடியவில்லை. அதாவது வைத்திய

நாததீக்ஷி தீயத்தையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு, உபாகர்மாவை யனுஷ்டிக்கும் ஆபஸ்தம்பிகளான யஜுர்வேதிகளுக்கு இவ்வருஷத்திய உபாகர்மா முந்தி நடத்தகிரகண தோஷமிருப்பதால் சென்ற ஆவணி மீ 29 உ தான் செய்ய வேண்டுமென்று பல பண்டிதர்களால் சாஸ்திரார்த்தங்களை நன்கு ஆராய்ச்சி செய்து தீர்மானிக்கப்பட்ட விஷயம் சமாசாரப் பத்திரிகைகளின் மூலமாயும், துண்டுப்பத்திரிகையின் வாயிலாகவும், வெளிவந்ததை யாவருமறிந்திருக்கலாம். இவ்வித மனுஷ்டிப்பதே உசித மென்று ஜகத்குரு பீடங்களில் விளங்கும் மஹான்களான லோகாசார்யர்களாலும் ஆமோதிக்கப் பட்டிருக்கின்றது. இவ்விதமிருக்க, சுருதி, ஸ்மிருதி, என்கிற பெயரைக் கூடக் கேட்டிராதவர்களும்; ஸம்ஸ்கிருத வியுத்பத்தி என்றால் எந்தக்கம்பேனிக்கு எழுதினால் கிடைக்குமென்று வினவுகிறவர்களும்; தாமே கலிகால மஹரிஷிகளென்கிற உருவெடுத்த அகங்கார ரூபமாயும், வேஷதாரிகளுமான சிலவைதிக உபாத்தியாயர்கள், பண்டித கோஷ்டிகளில் தீர்மானிக்கப்பட்ட சாஸ்திரார்த்தத்தைச்சரியானப் பிரமாணமின்றிதாமாகமாற்றி அனுஷ்டிப்பதால் நேரும் கொடிய தோஷத்தையும், ஈசுவராவதாரமென்று பலர்புகழப்பெற்ற மஹா குருக்களுடைய ஆக்ஞையை மீறுவதால்

गुरुमात्सर्यकृन्मर्त्यो विट्कृमिस्स्यान्नसंशयः । गुर्ववज्ञापरस्तद्वत् ॥

என்றுமறுபிறப்பில் கூறுதற்கியலாத, மிகவும் நீசமான மலத்தினுள்ள புழுவாக ஜனிக்கிறான் என்று மஹரிஷி ஸூதர் திருவாய் மலர்ந்திருப்பதையும் சற்றும் கவனியாமல், தைர்யமாய் தோஷமுள்ளகாலத்தில் நடத்திக்கர்மாவைக் கெடுத்து விட்டார்கள். இவர்கள் அறிவாளிகளாயிருப்பின், பண்டிதர்களிடமோ அல்லது ஜகத்குரு மஹாஸ்வாமிகளிடமோ சென்று, தங்களுககு ஆதாரமான சாஸ்திரங்களை எடுத்துக்காட்டி அவர்களையும் ஏன் அங்கீகரிக்கும்படி செய்யக்கூடாது? உண்மையில் இவர்கள் சொல்வது சாஸ்திரார்த்தமாயிருந்தால், பண்டிதர்களும் ஸ்ரீமதாசார்யாளும் ஏன் அங்கீகரிக்க மாட்டார்கள்? (தொடரும்)

ஓர் வைதிக உபாத்தியாயர்

தீபாவளிப் பண்டிகை.

ஆரியர்களே! நம்தேசத்தில் வரவர நாம் தெய்வபக்தி குறைந்தவர்களாய் வந்து கொண்டிருக்கிறோமென்பதைப்பற்றி நம்மையும் நமது புத்திரன் பேரனையும் நம் தகப்பன் பாட்டன் என்ற மேன்முறையிலும் யோஜித்துப்பார்த்தால் நன்கு விளங்கும் எத்துணையோ விரதங்களெல்லாம் அளவில்லாமல் நமக்கு இகபரஸாதகத்திற்காக ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றினது மகிமையும் படித்துப்பார்த்தால் ஆனந்தமாய் இருக்கும். வீணில் வளர்ப்பானேன். பிரஸித்தமான ஏகாதசிவிரதம் சிவராத்திரிவிரதம், கிருஷ்ணாஷ்டமி இவைகளின் கதையைப்படித்துப் பார்த்தால் ஆஸ்திகனுக்கு அளவிலாச்சுகத்தைக் கொடுக்குமென்பதிலையமுண்டோ. தேசாந்தரம்சென்று வெகுகாலமாய வெறுப்படைந்த கணவனை வீடுநோக்கி வந்து மனைவியுடன் வாழச்செய்யவும்புத்திரபாக்கியம்பெறவிரும்புவோர்க்கு அதை அளிக்கவும் மகாரோகங்கள் நீங்கவும் இன்னும் எண்ணியபலன்கள் கைகூட வேண்டியும் கணக்கில்லாத விரதங்கள் நம் சாஸ்திரங்களிலிருப்பது மட்டுமல்ல. அவைகளை முறை வழுவாதனுஷ்டித்து பாக்கியம் பெற்றவர்களும் கோடியுண்டு. அத்தகைய உத்தம விரதங்களெல்லாம் தெய்வபக்தியில்லாமையால் நம்மிடமிருந்தும் ஆடிக்காற்றிலகப்பட்ட இலவம் பஞ்சுபோலாய்விட்டன. ஆயினும் முற்கூறிய ஏகாதசி கிருஷ்ணாஷ்டமி, வினாயகசதுர்த்தி, சிவராத்திரி, வரலக்ஷ்மீ விரதம் என்ற சில மட்டிலும் ஓடி ஆடித்திரிந்து கொண்டு நம் முன் விளையாடுகின்றன. அவையும் எவ்விதமிருக்கிறதென்பதை நீங்களே சற்று கவனிக்கத்தலைப்பட்டால் கேவலம் டம்பத்திற்காகவும் அடுத்த வீட்டுக்காரி செய்தாள் நான்செய்யாமலிருப்பேனா வென்ற அகங்காரத்திற்காவுமேற்படுகின்றன. இவைகளின்கதி இவ்வண்ணமாயிற்றென்றால் இனித்தலைப்பெயரின் கதியையும் கேட்க வேண்டுமோ. இத்தீபாவளி என்பது மட்டிலும் நம் தேயத்

யத்திற் பெரும்பாலோர் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் 100 க்கு 99 பெயர்கள் இதன் தத்வம் இன்னது. இதை அனுஷ்டிக்கும் முறை இவ்வாறு இதையனுஷ்டிப் பதலாய பயன் இதுவென்று தெரிந்து கொண்டவர்களில்லை யென்றும் தெரிந்து கொண்ட ஒருவனும் அம் முறைப்படி நடத்தியும் நடாத்தியும் காட்டுவதில்லை யென்றும் தைரியமாய்க் கூறலாம். குழந்தை முதல் கிழவன் வரையில் தீபாவளி என்றால் அதிகாலையிலெழுந்து எண்ணெய்தேய்த்து முழுகிக்கோடி உடுத்திக் கொண்டு பட்டாஸ் சுடுவதுதானென்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் செய்யவேண்டுமென்று யார்தான் உபதேசித்தனரோ தெரியவில்லை. தொன்றுதொட்டு வெகு காலமாய் மட்டிலும் நடந்து வருகிறது. சில பழங்கிழடுகள் மட்டும் கங்காஸ்நானமாயிற்றோ வென்று கேட்டுக்கொள்ளும் வழக்கம் இருந்து வருகிறது. ஆகவே இது கங்காஸ்நான பலன் உள்ளது என்று மட்டிலும் ஒருவாறு தெரிந்து கொண்டோம். இருக்கட்டும் இதன் உண்மையை நாம் கூடியமட்டிலு மாராய்வாம். தொடரும்

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரி.

மதிப்புரை.

தர்மசாஸ்திரச் சுருக்கம்.

கீழவடையல் முத்துஸாமி அய்யரவர்களால் இயற்றப்பட்ட இப்பெயர்வாய்ந்த வோர் புஸ்தகம் ஷையாரால் அனுப்பப் பட்டு நம்பார்வைக்குக் கிட்டியதைக் கண்ணுற்றோம்.

தற்காலம் நம் தேசத்தில் நடைபெறும் வைதிக கர்மானுஷ்டானங்களுக்கு ஆதாரமாய்விளங்கும் தர்மசாஸ்திரங்களில் முக்கியமாய்க் கொண்டாடப்படும் வைத்தினாத தீக்ஷீதீயமென்கிற தர்மசாஸ்திரமே சிறந்ததென்று பலரும்மறிந்திருக்கலாம். அதுமிகவும் விஸ்தாரமாய் பூர்வபக்ஷ ஸித்தாந்தங்களுடன் வடமொழியிலிருப்பதால், யாவரும் சுலபமாய் அதிலுள்ள விஷயங்களை அறிந்து அனுஷ்டிக்க முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்களென்பதை ஷை அய்யரவர்கள் உணர்ந்து, லோகோபகாரத்

தின்பொருட்டு இதின் பெயருக்கிணங்க, சுருக்கமாய் அவசியமான பாகங்களை விடாமல் எளிய தமிழ் நடையில் அச்சிட்டு புஸ்தகரூபமாய் வெளியிட்டிருக்கிறார்கள். இப்புத்தகம் இக்காலத்திய ஜனங்களுக்கு மிகவும் உபகாரமா யிருக்குமென்பதை மறுக்க ஒருவராலுமியலாது. ஸம்ஸ்கிருத பாஷையில் பயிற்சியில்லாதவர்களுக்கு, இப்புத்தகம் இருந்தால் அனுஷ்ட்டிக்கவேண்டிய தர்மங்களின் ஸ்வரூபங்களையும், உசிதமானகாலங்களையும் முறைகளையும்நன்கறிந்துகொள்ளமுடியுமாகையால் இது அவசியமான புஸ்தகமே. வேண்டியவர்கள் அடியிலுள்ள விலாஸதாருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை ரூ. 1—8—0

கே. எம். நாகராஜன்.
கீழவடையல்
திருச்சிறை போஸ்டு
தஞ்சாவூர் ஜில்லா.

ஸ்ரீ தக்ஷிண கோகர்ண க்ஷேத்திரமான்மியம்.

இஃது அகஸ்தியன் ஆசிரியரான தி. கோ. ராமபத்திர சர்மாவால் வடமொழியில் விளங்கும் புராணத்திலுள்ள 12 அத்தியாயங்களையும் சிறந்த தமிழ் நடையில், வடமொழிச் செய்யுள்களின் கருத்தைக் கைவிடாமல், பின்பற்றியே இயற்றி அச்சிடப் பட்டிருக்கின்றது. இதில் க்ஷேத்திரமஹிமை, தீர்த்தங்களின் பெருமை, பக்தர்களின்நிலைமை, ஈசனின்கருணை கபிலை என்னும் பசுவிற்குப் பரமேசுவரன் காட்சியளித்தனுக்கிரகித்தது, முதலான பலவிஷயங்கள் அடங்கியிருக்கின்றன. படிப்போர்களின் மனதை நன்னெறியிற்றிருப்ப இதுவோர் சிறந்த கருவியாகும். இதன் விலை ரூ, 0—6—0
வேண்டுவோர்கள்

தி. கோ. ராமபத்திரசர்மா.
பிரமஸ்ரீ கோதண்டராம தீக்ஷதர் குமாரர்
திருகோகர்ணம்
புதுக்கோட்டை ஸ்டேட்.

என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்யதர்ம உபபத்திராதிபர்.